# பேர்ண் மாநிலத்தில் ஒன்றுசேர்ந்த பாதுகாப்பு

நல்வரவாகுக! சுவிஸில் வாழும் மக்கள் ஒருவர் மற்றவரையும் இங்கு அமுலில் உள்ள சட்டங்களையும் மதிக்கின்றனர். இதுவே சமாதானமாக சேர்ந்து வாழ்வதற்கான அடிப்படையாகவுள்ளது.



# இப்படி நாம் ஒன்றுசேர்ந்தும் பாதுகாப்புடனும் பேர்ண் மாநிலத்தில் வாழ்வோம்

சுவிஸில் பல வித்தியாசமான நாடுகளைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர். சமாதானமாக சேர்ந்து வாழ்வதற்கு சட்டங்களையும் மனிதர்களுக்கு இடையேயான ஒழுங்குமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். சுவிஸில் அனைத்து மக்களுக்கும் உரிமையும் கடமையும் உள்ளது, இவை அவர்களுக்கு சட்டங்கள் மூலமாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

**முக்கிய உரிமைகள் மத்திய அரச சட்டவாக்கம் ஊடாக வரையறுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக:**

> அனைத்து மனிதர்களும் சட்டத்தின் முன்பாக சமமானவர்கள். பாகுபாடு காட்டுவதும் நிறவெறியும் தடைசெய்யப்பட்டுள்ளது.

> ஆண்களும் பெண்களும் சம அந்தஸ்த்து உடையவர்கள்.

> அனைத்து நபர்களுக்கும் மத சுதந்திரம் இருப்பதுடன் தமது நம்பிக்கையின்படி வழிபடலாம்.






**நாளாந்த வாழ்வில் போலீசார்**

சுவிஸில் ஒன்றுசேர்ந்து வாழும் நாளாந்த வாழ்வில் போலீசார் நன்கு கட்டமைக்கப்பட்டுள்ளதுடன் எமது நாட்டின் பாதுகாப்பிற்கு மிகவும் முக்கியமானவர்கள்.
போலீசாரின் கடமைகளாக, சுவிஸில் அனைத்து மக்களையும் பாதுகாப்பது, சட்டத்தை நடைமுறைப்படுத்துவது மற்றும் குற்றச்செயல்களைக் கண்டுபிடிப்பது உள்ளது. இந்த நோக்கத்திற்காக அவர்கள் வேறு விடயங்களுடன் ஆட்களையும் சோதனை செய்து கொள்வார்கள்.
நீங்கள் சோதனை செய்யப்பட்டால், நீங்கள் கட்டாயமாக உங்கள் அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் அல்லது வேறு வழியில் உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

> பிழையான விபரங்களைத் தெரிவிப்பது தண்டனைக்குரியதாகும்.
> தற்சமயம் மேலதிக தெளிவாக்குதல் தேவைப்படின் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல போலீ சாருக்கு உரிமையுள்ளது.
> தெளிவாக்குவதற்காக அல்லது மேற்கொள்ளவுள்ள குற்றச்செயல் ஒன்றைத் தடுப்பதற்காக உங்கள் உடைகள், பைகள் மற்றும் வேறு வைத்திருக்கும் பொருட்களை சோதிப்பதற்கு போலீசாருக்கு அனுமதியுண்டு.

அத்துடன் பொலிசாரும் விதிகளைக் கடைப்பிடிப்பதுடன் நட்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

> அவர்கள் நபர்களைச் சோதிப்பது குறித்த காரணத்தை (அடிப்படை விபரங்களை) உங்களுக்கு அறியத்தர வேண்டும்.

> ஆண் அல்லது பெண் போலீசார், சீருடை அணியாதிருந்தால், அவர்கள் கட்டாயமாக உங்களுக்கு தமது அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

ஆட்களை சோதனையிடும் ஒரு வேளையில் உங்களைப் போலீசார் சட்டத்திற்கு முரணாக நடத்துவதாக உணருவீர்களானால்: அந்த ஆண் அல்லது பெண் போலீசாரின் பெயரைக் கேட்பதுடன் திகதி, நேரம் மற்றும் நகரின் பெயரைக் குறித்துக் கொள்ளவும்.

இச் சம்பவத்தை நீங்கள் பேர்ண் மாநில போலீஸ் கொமாண்டோக்களின் குறைகூறும் நிலையத்திற்கு அறிவியுங்கள்: beschwerdestelle@police.be.ch அல்லது அண்மையாக உள்ள போலீஸ் நிலையத்தில்

**மற்றைய நாடுகளைப் போன்று சுவிஸிலும் குறிப்பிட்ட நடைமுறைகளுக்குத் தடை உள்ளதுடன் தண்டனைக்குரியதாகும், உதாரணமாக:**

> பெண்களை, யுவதிகளை, சிறுவர் சிறுமிகளை மற்றும் ஆண்களை வார்த்தை, சமிக்கை அல்லது செயலால் பாலியல் ரீதியாகத் தொந்தரவு செய்வது தண்டனைக்குரியதாகும். நீங்கள் தொந்தரவு செய்யப்பட்டால் உங்கள் எதிர்ப்பைக் காட்டுங்கள் அத்துடன் உதவியைத் தேடிக்கொள்ளுங்கள்.

> எமது சமூகம் எந்த வடிவமான வன்முறையையும் சகித்துக் கொள்வதில்லை - வீட்டில் குடும்பத்திற்குள்ளாக இருப்பினும் இல்லை. அனைவரும் போலீசாருக்கு அறிவிக்கலாம் -நீங்களும் மேற்கொள்ளலாம், நீங்கள் வன்முறையைக் கண்டால் அல்லது கேள்விப்பட்டால் -உ.ம் அயல் வீட்டில்!

> திருட்டு மற்றும் பொருட்களை சேதமாக்குவதன்போதான விதிமுறை: உங்களுக்கு எவை சொந்தமானதோ, அவை தொடர்ந்தும் உங்களுக்கு சொந்தமானது.

**நீங்கள் ஒரு குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவராகவோ அல்லது சாட்சியாகவோ இருப்பின், நீங்கள் போலீ சாரை அழையுங்கள் (தொலைபேசி 112 அல்லது 117, இலவசம்). நாங்கள் முழு வருடமும் இரவும் பகலும் உங்களுக்காக சேவையில் உள்ளோம்.**



# முக்கிய தொலைபேசி இலக்கங்கள்

**அவசர வேளைகளில்:**

போலீஸ் ........ **112 அல்லது 117**

பெண்களுக்கான போலீசார் தொடர்பு தொலைபேசி (தொலைபேசியில் பதிலளித்தல்:பெண் போலீஸ் மீளவும் அழைப்பார்) ........ **031 332 77 77**

ஆம்புலன்ஸ் நோயாளர் சேவை ........ **144**

**வீட்டு வன்முறை மற்றும் பாலியல் வன்முறையைப் பொறுத்தவரை போலீசாருக்குப் பக்கமாக வேறு ஆலோசனை நிலையங்களும் உள்ளன:**

பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி Bern ........ **031 370 30 70**

பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி Biel ........ **032 322 56 33**

Lantana (பாலியல் வன்முறை) Bern ........ **031 313 14 00**

Vista (பாலியல் + வீட்டு வன்முறை) Thun ........ **033 225 05 60**

வன்செயல்செய்பவர் கற்கும் திட்டம்: பேர்ணில் வீட்டு வன்முறைக்கு எதிராகத் தலையிடும் நிலையம் ........ **031 633 50 33**

**பொதுவான ஆலோசனை மற்றும் சட்ட ஆலோசனைகளை இங்கு பெற்றுக்கொள்ளலாம்:**

ISA – வெளிநாட்டவருக்கான தகவல்- மற்றும் ஆலோசனை நிலையம். ........ **031 310 12 72**

ஆபத்திலிருக்கும் மனிதருக்கான பேர்ண் சட்ட ஆலோசனை நிலையம் ........ **031 385 18 20**

சுவிஸ் அகதிகளுக்கான உதவி ........ **031 370 75 75**

gggfon – வன்முறை மற்றும் நிறவெறிக்கு எதிரான ஒன்றிணைந்த செயற்பாடு ........ **031 333 33 40**

தஞ்ச உதவி பேர்ண் ........ **031 382 52 72**

CSP பேர்ண் -யூறா ........ **032 493 32 21**

**ஒன்றுசேர்ந்து வாழ்வது குறித்த தகவல் படத்தை நீங்கள் இந்த மற்றும் வேறு மொழிகளில் பின்வரும் இணையத்தளத்தில் காணலாம்:** www.police.be.ch

**Bern Cantonal Police**
Waisenhausplatz 32
3011 Bern

401.647